செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஆவணி மீ உ௩உ (1889) அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஆடி மீ அஉ வெள்ளிக்கிழமை (24-7-1970) [இல-கக

### இந்தோனேஷிய நாட்டில்

# செந்தமிழின் வளர்ச்சிக்காகத் தேவஸ்தானத்தின் தொண்டு

## கல்வி நிலையம் வளர்கிறது

## இந்துசாதனத்தின் தொண்டுக்குப்பாராட்டு

[தென்கிழக்காசியாவிலுள்ள வடசுமத்திரா, மேடான் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில் பரிபாலனசபைத் தலைவரும் ''இந்துசாதனம்'' பத்திரிகையின் அபிமான நீருபருமாகிய

**கோ சுப்பிரமணியன் அவர்கள்**

டி சபையின் பணிகளைப்பற்றி எமக்கு அனுப்பிய கடிதம்]

எங்கள் மீது அன்புகூர்ந்து சிரமம் கருதாமல், சமயத்தின் சிறந்த வெளியீடான 'இந்து சாதனம்' என்னும் செய்தித்தாளை அனுப்பி வைத்தமைக்கு, வடசுமாத்ராவின் பெருநகரமாகிய மேடானில் வாழும் இந்து சமயத் தமிழர்கள் சார்பில் எனது உளம் நிறைந்த நன்றியை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும், இந்நாட்டில் வாழும் நாங்கள் நமது இந்து சமய சம்பந்தமான எந்தவொரு செய்தித் தாளையும் இன்று வரைபெற்று படித்ததில்லை இந்த நிலையில் தங்கள் வெளியீடான 'இந்து சாதனம்' கிடைக்கப்பெற்று அளவிலா மகிழ்ச்சியும் ஆர்வமும் கொண்டோம் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

எவ்வாறோ? எங்களின் மூகவரி அறிந்து, ஆர்வமுடன் எங்களுக்கு இந்துசாதனத்தை அனுப்பி வைத்த தங்களின் திருஉள்ளத்தை நினைந்து நினைந்து பெரிதும் போற்றுகிறேன்.

சுருக்கமாக, இந்தோனேஷியாவில் தமிழர்களைப் பற்றியும் சில குறிப்புக்களை தங்கள் பார்வைக்குத் தருகின்றேன்.

''ஆயிரக்கணக்கான இந்தோனேஷியத் தீவுகளில் சுமாத்ராவின் வடபகுதியில் ஏறக்குறைய 15,000 தமிழர்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் அனைவரும் இந்நாட்டுக் குடியுரிமை பெற்றவர்கள். 90 சதவிகிதம பேர் இந்துசமயத்தை தழுவியவர்கள். தாய்மொழியாகிய தமிழைக் கற்பதற்கு ஆசிரியர் சேவை வசதியின்மையால் ஒரு சிலரே தமிழை எழுதவும் படிக்கவும் தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள். நமது ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில்

வளர்ச்சி 2-ஆம் பக்கம்

திருச்சிற்றம்பலம்

திருமணியைத் தித்திக்குந்
தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத்
தெளிந்த தேறல்
குருமணியைக் குழல்மொந்தை
தாளம் வீணை
கோக்கரையின் சச்சரியின்
பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப்
பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தி னருங்கலத்தைப்
பாவந் தீர்க்கும்
அருமணியை ஆரூரி
லம்மான் றன்னை
அறியா தடிநாயே
னயர்த்த வாறே.

திருச்சிற்றம்பலம்

-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## சைவ சமயக் கல்வி

### ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரவர்கள்

[தொகுத்தவர்: ஆசிரியர் மா பீதாம்பரன், திருக்கோணமலை]

''இக்காளில் எமது சாகியத்தாருக்கு நேரிட்டிருக்கிற துன்பகளோ மிகப்பல. அவற்றின் நீர்மையை அறிந்தார் சிலர்; அறியாதார் மிகப்பலர், துன்பத்தைத் துன்பமென்றறியாது. சுகம் என நினைந்து ஏமாந்திருப்போர் ஒரு சாரார். துன்பத்தைத் துன்பமென்றறிந்தும் அதனை நீக்குதற்கு வழிதேடாது சோம்புற்றிருப்போர் ஒரு சாரார்.

எம் சாகியத்தாரது இன்றைய நிலையோ சிறைவாய்ப்பட்டு இழிதொழில் புரிந்த தேவர் நிலைக்கு ஒப்பாவதெனத் தேசாபிமானிகள் பலர் பேசுகின்றனர். எமது ஜனசங்க வாழ்க்கையிலுள்ள இழுக்குகள் மிகப்பல. இவை அனைத்தும் நீங்கி யாம் உய்யும்பொருட்டுக் கருணையங் கடலாகிய இறைவனை வழிபடவேண்டும் என்பது அறிஞர் பலரது உள்ளக் கிடக்கை.

வாழ்க்கையிலுள்ள குறைகளுட் பல நெறிதவறிய கல்வி முறையினால் ஆயினவாதலின், அக் கல்வி முறையைத் திருத்த அனைத்துந் திருந்தும் என்று கூறி அதற்காகப் பெரியார் பலப்பல நன்முயற்சிகளைச் செய்து வருகின்றனர். இம் முயற்சிகளின் நோக்கத்தினைச் சுருக்கமாக ஆராய்ந்துணர்வோமாக.

கல்வி முறையைத் திருத்த வேண்டும் என்னும் கருத்தானது, சட்டமமைக்கும் மந்திராலோசனைச் சபையிலும், தேசபக்தர் குழுமிய பிரசங்க மேடை

( வளர்ச்சி - 4ஆம் பக்கம் )

## இந்துசமய ஆலோசனைச் சபை

கூட்டணி அரசாங்கத்தின் ஆட்சியாரம்பித்த பின் டி சபை புதிதாக அமைக்கப்பட்டு 1-7-70 தொடக்கம் கடமைகளைப் புரியத் தொடங்கியுள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கலாசார சபைத் தலைவரும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை உபதலைவருமாகிய திரு. சிவ. உ. சோமசேகரம் அவர்கள் டி சபையினது யாழ்ப்பாணப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப் பெற்றுள்ளனர்.

## பக்தி உணர்வு

### சாத்விக உணவே சிறந்தது.

வித்துவான் மு. இராமகிருஷ்ணன் அவர்கள்
கன்யா குருகுலம், சென்னை 19.

பக்தி உணர்வு, உலகில் எங்கும் குறைந்து வருவது குறித்து, உண்மையிலேயே சான்றோர் பலர் நம் உள்ளம் கவல்கின்றனர். பக்திக்கே நிலைக்களனாய் விளங்கிய பாரதத்திலும் கூடவா அந்த உணர்வு குறைந்து வரவேண்டும் என எண்ணுவோர் பலராயினர். குறிப்பாக நாயன்மார்களும், ஆழ்வார்களும் அவதரித்த தமிழ்மண்ணில் கூடவா தூயபக்தி உணர்வு குறைதல் வேண்டும்? இதற்கான காரணங்களை ஆராய்ந்து, அவற்றைப் போக்கச் சமயத் தலைவர்கள் முயன்றால், நாட்டிற்கும் சமயத்திற்கும் பேருதவியாக இருக்கும்.

**எளிய வாழ்வு:**

பண்டு மக்கள் எளிய வாழ்வு வாழ்ந்தனர் வாழ்க்கைத் தேவைகள் மிகக் குறைவு. தம தேவைகள் நிறைவேறியதும், அவர்களுக்குத் தம்மைவிட மேலான சக்தியைப் பற்றி எண்ணுவதற்கு ஓய்வு இருந்தது; மன அமைதியிருந்தது; ஆனால், தற்போதோ மக்கள் தமது வாழ்க்கைத் தேவைகளைப் பெரிதும் பெருக்கிக் கொண்டுள்ளனர். நாளும் அவர்கள், தம் தேவைகளை நிறைவேற்றுதற்குப் பெரிதும் உழைக்கின்றனர். அப்படியும் தேவைகள் நிறைவேறுவதாயில்லை மனக்கவலை உண்டாகிறது. பணத்தையின்னும் எப்படி எல்லாம் ஈட்டலாம் - இதுவே சிந்தனை. மனிதனுக்கு ஓய்வில்லை மன அமைதியில்லை.

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

## யாழ். வருகிறார்கள்

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள். தமது இந்திய தல யாத்திரையை முடித்துக்கொண்டு எதிர் வரும் 30 7-70 ல் ஈழத்துக்கு வருகின்றார்கள். கடந்த ஒருமாசகாலமாக மதுரை, தர்மபுரம், திருவிடை மருதூர், இராமேசுவரம் ஆதிய இடங்களில் தம்பிரான்சுவாமிகளது கதாப்பிரசங்கங்கள் தொடர்பாக நிகழ்ந்துள்ளன. ந நி.

பாரதத்தொழிற் ...




பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஞு ஆடி மீ அ-உ வெள்ளிக்கிழமை [1970]

## அரசியலமைப்புத் திட்டம்

19-7-70 ஆரம்பிக்கப்பட்ட அரசியல் நிர்ணயசபை நடத்திய மகாநாட்டில் நிகழ்ந்த விவாதத்தில் இலங்கையை ஒரு குடியரசு நாடாக 1970ம் ஆண்டு பூர்த்தியாக முன் பிரகடனஞ் செய்ய வேண்டுமென்ற தீர்மானம் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் உட்பட யாவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவெய்தியது. சிறுபான்மையைச் சேர்ந்த மக்களது உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய விதிகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்படுதல் வேண்டுமென தமிழ்ப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். கனம் பிரதம மந்திரியவர்களும், அரசியல் சட்ட அமைப்பு மந்திரி திரு. கொல்வின் ஆர் டி சில்வாவும் சிறுபான்மை மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுமென வாக்குறுதி அளித்தனர்

சென்ற ஐக்கிய தேசிய அரசாங்கத்தில் தலத்தாபன மந்திரியாகக் கடமையாற்றிய திரு. ஆர் பிரேமதாசா அவர்கள் சிறுபான்மை மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்பதைப் பற்றி சிறந்த கருத்தமைந்த விரிவுரையாற்றினர். அவருடைய ஒரு கருத்தை மீண்டுத்தருகின்றேம். "ஒருவன் தமிழனுகவோ, சிங்களவனுகவோ பறங்கியாகவோ, முஸ்லீமாகவோ பிறக்கின்றது அவனுடைய விருப்பத்தின்படியல்ல அவ்விதமாக பிறப்பது விதியின்படி நிகழ்வதாகும் நாட்டில் மக்கள் தோன்றுவது இந்நியதியின்படியாயிருக்கின்றமையால் சாதி சமய வேறுபாட்டுக்ாகக அவர்களுடைய உரிமைகளை மறுப்பது தர்மமல்ல"

திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் இலங்கை குடியரசாகுவதைத் தான் ஆதரிப்பதாகவும், ஆனுல் இந்தியாவைப் போல இலங்கையும் பிரித்தானிய கொம்மன்வெல்தில் அங்கத்துவம் வகிப்பதை தான் விரும்புவதாகவும் அங்ஙனம் செய்து கொள்வதினுல் இலங்கையினது பொருளாதாரம் விருத்தியடையுமெனவுங் குறிப்பிட்டனர்.

இப்பொழுதுள்ள பாராளுமன்றமும் அரசியல் நிர்ணசபையும் மோதகமும் கொழுக்கட்டையும் போன்றன. பேர்கள் வேருகவிருந்தபொழுதிலும் அங்கத்தவர்கள் ஒரு கூட்டத்தினரே.

நாட்டையாளுங் கட்சிக்கு மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட அங்கததவர்களிருக்கின்றபடியினுல் அரசியல் நிர்ணயசபை அமைக்கும் அரசியல் அமைப்புத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறுமென்பதற்கொரு தடையுமில்லை.

மக்களது ஒற்றுமையையும் பொருளாதார விருத்தியையும் சாமாதானத்தையும் இன்ப வாழ்வையும் போற்றிக் காக்கக்கூடிய ஒரு அரசியல் திட்டத்தை அரசியல் நிர்ணய சபை அமைப்பதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக.

## இந்தோனேஷியநாட்டில் செந்தமிழ்......

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

மூலம் இந்து சமயக் குழந்தைகளுக்கு தற்சமயம் தமிழ்க் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. இந்நாட்டில் வாழும் தமிழர்களில் பெரும்பானமையோர் பெருநகரமாகிய மேடான் நகரிலே வாழ்கிருர்கள். எனவே இந்நகரத்தில் அமைந்திருக்கும ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில் ஆலயம்தான் பெரியது. இந்நகரை அடுத்துள்ள பிஞ்சை என்னும் ஊரில் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவிலும், லெம்புபக்கம் என்னும் ஊரில் ஸ்ரீ தெண்டாயுதபாணிகோவிலும், மேடானில் வேறு ஒரு இடத்தில் ஸ்ரீ தெண்டாயுதபாணி ஆலயமும் இருக்கின்றன. இவைகளுக்கு தலைமை ஸ்தாபனம் இந்த மேடான் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில்தான்.

மேடான் ஸ்ரீமகாமாரியம்மன் ஆலயத்திற்கருகில் சிவன் கோவிலும், விஷ்ணு கோவிலும் தனித் தனியே பிரகாரங்களுடன் அமைந்துள்ளன.

மேடான் நகரில் கோவில் நிர்வாகத்தில் தனது சொந்த கட்டடத்தில் ஆரம்பப்பள்ளி ஒன்றும், உயர்நிலைப் பள்ளி ஒன்றும் ஆக இரண்டு பள்ளிகள் நடைபெற்றுவருகிறன்ன.

இப்பள்ளிகளில் ஆயிரம் மாணவ மாணவிகள் கல்வி கற்கின்றனர் போதனு மொழி இந்தோனேஷிய மொழியாகும்.

பிரதி வருடமும் இந்துக்களுடைய பண்டிகைகள் விழாக்கள் உதாரணமாகத தைப்பூசம், தீபாவளி, கார்த்திகை உற்சவம், நவராத்திரி, சிவராத்திரி, பங்குனி உத்திரம் மற்றும் இதர விழாக்களும் மிக விமரிசையாக நடைபெற்று வருகின்றன. இவற்றில் கரகமாடுதல், தீ மிதித்தல் முதலிய சமய சாதனைகளும் நடைபெறும் இதில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பயபக்தியுடன் கலந்துகொள்வார்கள்.

நீங்கள் எங்கள் பால் கொண்டுள்ள அன்பிற்கும், சமய ஆர்வத்திற்கும் இனித் தொடர்ந்துஅளித்து வரவிருக்கும் ஆத விற்கும் எங்களின் (இந்தோனேஷிய மக்களின்) உளம் நிறைந்த நன்றியை பன்முறை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## பக்தி உணர்வு

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

பட்டு, கெட்ட நிலையிலேயே கிடைக்க வேண்டியிருக்கிறது. மனிதனின் உயிர்நாடியான இத்தேவைகள் சூழ்நிலையால் பாதிக்கப்படும் போது, அவற்ருன் மக்கள் உடலும், உடலால் உள்ளமும் பாதிக்கப்படுதல் இயல்பே. பாதிக்கப்பட்ட உள்ளத்தில் பரந்த எண்ணத்திற்கு, பரம்பொருளைப் பற்றிய சிந்தனைக்கு, வாய்ப்புக் குறையத்தான் செய்யும்.

உழைப்பு:

பண்டு நம் நாட்டில் மிகப் பெரும பான்மையோர் நேரடியாகவே உணவு உற்பத்தி செய்யும் தூய உழைப்பில் மக்கள் தம்மை ஈடுபடுத்தியிருந்தனர். பயிர் உறபத்தியில், திடீரென உண்டாகும் புயல், கடும்மழை, பூகம்பம் போன்றவற்றிலிருந்து காக்கப்படவும், பருவமழை தவருதிருப்பதற்கும் அவர்கள் எப்பொழுதும், தம்மைவிட மேலாக ஒன்றை எண்ண வேண்டியவராக இருந்தனர். எனவே படிப்படியே வேளாளரிடத்தும் பிறரிடத்தும் பக்தி உணர்வு நாளும் வளர்ந்து ஓங்கலாயிற்று! தற்போதோ, வரவரத் தொழிற்சாலைகளில் இயந்திரங்களுக்கிடையில் உழைக்கும் மக்கள் பெருகி வருகின்றனர் இவர்கள் இயற்கை இடையூற்றைப் பற்றி அதிகம் கவலை கொள்ளத் தேவையில்லை ஆனுல் வாழ்க்கைத் தேவையைப் பெருக்கி, அதனுல் அதற்குப் பதில் மிக்க கவலையுடையவராக இருக்கின்றனர் உயிர்த்தன்மையுள்ள செடி கொடி மரங்களிடம் எப்பொழுதும் பழகுங்கால் ஏற்படும் உள்ள வளர்ச்சியை வெறும் சடப் பொருளான இயந்திரங்களிடையே எப்பொழுதும்பழகுவோரிடையே காண இயலுமா? இதனுலும் பக்தி உணர்வு குறைய நேரிடுகிறது எனலாம்.

உணவு:

முன்னர் சாத்துவீக உணவையுண்போர் மிக்கிருந்தனர். விரதங்களும் நோன்புகளும் நிரம்ப உண்டு. இறைவனுக்குப் படைக்கும் கனிகாய்களையே பெரிதும் உண்டனர். ராஜஸ உணவு உண்போர் குறைவாகவும் இருந்தனர். தற்போது நிலைமாறி வருகிறது. தாமச உணவு உண்போர் பெருகி, ஏனைய உணவு உண்போர் மிகவும் குறைந்து வருகின்றனர் கனிகளை மட்டுமே உண்ணுப் தூய சாதவீக உணவு நெறியைப் பின் பற்றுவோரை எங்குமே காணமுடியவில்லை.

"உயிர்கள் அனைத்துப் உணவிலிருந்து உண்டாகின்றன. உயிர்கள் அனைத்தையும் காப்பாற்றுவது உணவே. உயிர்கள் அனைத்தையும் இறுதியில் உணவாகவே முடியும்" என்பது தைத்ரீய உபநிஷத் வாக்காகும். எனவே, நாம் எந்த அளவிற்குத் தூய உணவை உட்கொள்ளுகிறேமோ, அந்த அளவிற்கு நாமும உயர்ந்தவராவோம் உணவே ஒரு மனிதனை உருவாக்குகிறது. இறைச்சிதரப்படாத சிங்கம் ஒன்று அமெரிக்காவில சாத்வீக சிங்கமாக மாறிவிட்டது இதனைச் செய்தி இதழ்கள் வாயிலாகச் சிலர் அறிந்திருக்கலாம். உணவால் சிங்கத்தையே மாற்ற முடியுமானுல், மனிதனை எந்த அளவிற்கு அது மாற்றும் என்பதை உணரலாம். எனவே, இது குறித்து ஆதீனங்களும், பல்வேறு சமய நிலையங்களும் முயற்சிசெய்து தூய கனிகளை மட்டுமே உணவாகக் கொள்ளுமாறு அற வழியில் வாழவிரும்பும் மக்களையாவது தூண்ட வேண்டும். இயற்கை உணவு நெறியில் சிறந்த தொண்டர்களைப் பயிற்றுவிக்க அங்கங்கேயுள்ள கனி தரும் சோலைகளைப் பயன்படுத்த வேண்டும். பண்டுபோல் தூயமாணவர்களை உயர்ந்த குருகுல வாசகங்கள் உருவாக வேண்டும், குரு சிஷ்ய பாரம்பரியத்தை வளர்க்க வேண்டும். இது போன்ற முயற்சியில் ஆதீனங்கள் தொண்டு புரிய முன்வரின் தூய சிந்தனையுடைய தொண்டர்கள கிடைக்கக்கூடும். அவர்கள் மூலம் மக்களிடையே பக்தி உணர்வையும் அறவுணர்வையும் வளர்க்கலாம். மீண்டும் நாயன்மார்கள் - ஆழ்வார்கள் வாழ்ந்த காலத்தை நம் வாழ் நாளிலேயே படைக்கலாம்.

மக்களிடையே குறைந்து வரும் இறை உணர்வை மீண்டும் உயிர்ப்பிக்க, மக்கள் சமய நிலையங்களையே ஆதீனங்களையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள்.

வழிபாடு:

யானையின் அருகே பூனையைக் கொண்டு சென்ருல், பூனை யானையைக் கண்டு அஞ்சிஅடங்கி, 'யானையாரே, நீர் என்னைக் காக்க வேண்டும்' எனக் கெஞ்சுவதுபோல நடுங்கும். அதே பூனையை, எலியிடம் கொண்டு சென்ருல், நானே பெரியவன் நீ எனக்கு இரை. உன்னைக் கொன்று தின்பேன்' என அகம் கொண்டு, அதனைக் கொல்ல முயலும். அது போலவே மனிதன் தன்னைவிட மிக உயர்ந்த பரம்பொருளை எண்ணி, எண்ணத்தால் அவர் அருகே நெருங்க நெருங்க, அவன் உள்ளம் அடக்கமும் பணிவும் பெறும். அவனது உள்ளம் ஒளிபெறும். அதே மனிதன், எப்பொழுதும் தன்னைவிடத் தாழ்ந்த சிற்றுயிர்களிடமோ அல்லது தன்னுல் படைக்கப்பட்ட பொருள்களிடமோ நெருங்க, நெருங்க, அவன்பால் தான் எனும் அகம் மிகும். அதன் பயனுய்ப் பக்தி உணர்வு குன்றி, யாரையும் தூற்றி, எதற்கும் துன்பப்பட்டுத் துயருறுவான். எனவே தூயபக்தி உணர்வு, ஒருவனை நாளும அடக்கமுடைய சான்றேனுக மாற்றும். அவ்வுணர்வைப் பெற, ஒல்லும் வகை எல்லாம் முயலவோமாக!

—'குமாதுரபரன்' 15-5-70.

## திருவிடை, மருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத்திருவாவடுதுறை ஆதீனம் 23 ஆவது பட்டம் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகபரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்திற்குச் சொந்தமான 15 தேவஸ்தானங்களில் ஒன்ருகவும், வரகுண பாண்டிய மன்னன் தன்னுடைய பிரம ஹத்திதோஷம் நீங்கப் பெற்று திருப்பணிகள் செய்துள்ள தேவஸ்தானமாகவுமுள்ள, திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானத்தை நல்ல திருப்பணிகள் பெரும் திட்டங்களில் பல செய்து வைத்து, இது வரை மக்கள் பார்த்திராதவகையில் சுமார் 2½ (இரண்டேமுக்கால்) லட்ச ரூபாய் செலவில் அழகான முறையில் யாகசாலை காவணங்கள் அமைத்து பிரபலமான ஆகம - வேத சாஸ்திர விற்பன்னரான திருவாவடுதுறை சிவஸ்ரீ சுவாமிநாதசிவாசாரியர் அவர்களை முதல்வராகக்கொண்டு சுமார் 180 க்கு மேற்கொண்ட சிவாசாரியர்கள் 10 காலம் யாகசாலைப் பூஜைகளையும் முறைப்படி வேத திருமுறைப் பாராயணங்களுடனும் சமய சொற்பொழிவுகளுடனும் நடத்திக்கொண்டு வந்து ஆனித் திங்கள் 31 - ஆம் திகதி காலை தருமபுரம் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கயிலை மகா

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 8911

சரவணமுத்து சிவபெருமான்
வட்டுக்கோட்டை மேற்கு
—வழக்காளி

எதிராக

1 இராமசாமி காசிப்பிள்ளையும்
2 பெண் விசாலாட்சியும்
வட்டுக்கோட்டை கிழக்கு
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8911ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டின் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஆ. ஆவணி மாதம் 10 ம் திகதி (10-8-70) திங்கட்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2805-55ம், 6-3-67 தொடக்கம் 19-12 67 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 278-32

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை இறை 'பனித்தோட்டம்' நி பர 2, 14¾ குளியும் வீடும் வளவும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு நடராசா கந்தையாவுக்கும் பங்காளிகளுக்குமுரிய ஆதனம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு கந்தையா குமாரசாமியின் ஆதனம் இவையடங்கலும்

J A. எட்வேட்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை, 20—7—70
எம். 168 24—7 70

## பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

மிருசுவில், உசன், வேலுப்பிள்ளை மகேந்திரராசா

இல: 3889 எதிராக —வழக்காளி

1) மிருசுவில் உசன், கந்தையா துரைராசசிங்கமும் (2) பெண் அகிலநாயகியும் (3) ஷை யூர் பூபாலசிங்கம் பரமேஸ்வரனும் பெண் துவாரகாதேவியும் (5) ஷை யூர் வேலுப்பிள்ளை விவேகானந்தன் (6) ஷை யூர் வேலுப்பிள்ளை புஷ்பநாயகம் (7) ஷை யூர் வேலுப்பிள்ளை விபுலானந்தன் (8) யூர் வேலுப்பிள்ளை மகள் தனலட்சுமி (9) ஷை யூர் வேலுப்பிள்ளை மகள் கருணாநாயகி

பராயமற்ற 8ம், 9ம் எதிரிகளுக்காக நியமிக்கப்பட்ட பாதுகாப்பாளர் 6ம் எதிரி வேலுப்பிள்ளை புஷ்பநாயகம் தனக்காகவும் 8ம், 9ம் எதிரிகளுக்காகவும்

(10) மிருசுவில், உசன் சிதம்பரப்பிள்ளை இரங்கநாதன் (11) ஷை யூர் ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை (12) தெல்லிப்பழை ஸ்டேசன் றோட் ராமநாதன் சங்கரப்பிள்ளை, (13) யாழ்ப்பாணம் கொழும்புத்துறை. கொழும்புத்துறை றோட் ராமநாதன் வீரசிங்கம் மனைவி மாணிக்கவல்லி (14) யாழ்ப்பாணம், கொழும்புத்துறை புங்கன்குளம் றோட் நாகராசா ஒழுங்கை, ராமநாதன் நாகராசா. (15) யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புங்கன்குளம் றோட், சிவநாதன் பெண் ருக்குமணி (16) ஷை யூர் இ. சிவநாதன் (17) யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புங்கன்குளம் றோட், நாகராசா ஒழுங்கை சூரியநாராயணமூர்த்தி மனைவி பெண் திருப்பதி (18) ஷை யூர் நமசிவாயம் பெண் மகேஸ்வரி (19) ஷை யூர் M நமசிவாயம், (20) வெள்ளவத்தை பாமன்கடைலேன். இல:53 அழகராசா சுப்பிரமணியம் (21) திரிகோணமலை கிறீன் றோட் 28/1 A. K. ராமநாதன் (22) சாவகச்சேரி, கண்டி றோட் சீவர் இல்லம் A. சிவலோகநாதன் (23) இரத்மலானை, 1-ம் ஒழுங்கை இல: 7 அழகராசா சுவாமிநாதன். (24) கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தை, 192/11 அழகராசா மயில்வாகனம், (25) வெள்ளவத்தை பாமன்கடை லேன் இல: 53 செல்லப்பா பாலசிங்கமும் பெண் (26) பாலசரஸ்வதியும்
எதிராளிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சி பகுதி கச்சாய்க் கோவிற்பற்று தெற்கிலி றை சன்னிச்சி வட்டையும் மறுபிரிவுகளும் நி. ப 39½ எல்லை கிழக்கும் வடக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கு: கந்தர் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். என்னும் ஆதனத்தை 1951-ம் ஆண்டின் 16ம் இலக்கப் பிரிவிடல் கட்டளைச் சட்டத்திற்கமையப் பிரிவிடல் செய்ய அல்லது விற்க மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடல் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதென்பதை இத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய எதிரிகளை மேற்படி கோட்டில் 1970-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ம் திகதி காலை 9 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிறார்கள்.

1970ம் ஆண்டு ஆடி மீ 14 ம் திகதி
கோட்டாரின் கட்டளைப்படி
மு. முத்துக்குமாரசாமி
சக்கிடுத்தார்

## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழ இல: 10483

1 கந்தையா சோதிலிங்கம், வல்வெட்டி —வழக்காளி

எதிராக

1 சங்கரப்பிள்ளை இளையதம்பி, சமரபாகு
2 பெண் இலட்சுமிப்பிள்ளை —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்விபரிக்கப்படும் ஆதனங்களை 1970ம் ஆ செப்டம்பர் மீ 2-ம் திகதி (2-9-70) புதன்கிழமை முற்பகல் 9 30 மணிதொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று:

1. சமரபாகுதேவன் குறிச்சிவிறை தொண்டமான்பகுதி நி. பர. 18 இதின் வடக்குப் பக்கமாக நி பர. 14 குளி 7 ஆனால் தற்கால அளவின்படி நி ப. 11 குளி 12 இதின் மேற்குப் பாகமாக நி. பர. 5 குளி 15 நீக்கி கிழக்குப் பக்கமாக நி. ப. 1 குளி 17ம் நீக்கி மிகுதிக்கு நி. ப. 3 குளி 16 இதின் கிழக்குப் பக்கமாக நி. ப. 1 நீக்கி மிகுதிக்கு நி. ப. 2 குளி 16 எல்லை கிழக்கு: முத்துச்சாமி மகன் இருவருக்குமுடைய ஆதனம், வடக்கு: ஒழுங்கை, மேற்கு: அருளானந்தன் பெண் செல்வநாயகி அம்மாளுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு: இராசசித்திவிநாயகத்திற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள் தென்னைகள், மா, வேம்புகள், கொட்டில் வீடுகள் அடங்கலும்
(மதிப்பிட்ட விலை ரூபா 2, 855/-)

2. ஷை மேற்படி கோயிற்பற்று வல்வெட்டித்துறை இறை கச்சை ட்டிக்கொண்டான் நி. ப. 6, 7/8 ஷை நி. ப. 9, 3/8, கூடிய நி. ப. 16¼ இதுவும் சமரபாகுதேவன் குறிச்சி கச்சைகட்டிக்கொண்டான் நி ப 8 ஷை நி. ப. 11, 3/8 ஷை நி. ப. 9 3/8 இப்பிரிவுகளில் 1ம் 2ம் பிரிவுகளில் 1/6 பங்கும் 3ம் பிரிவில் முழுவதும் சேர்ந்து ஒன்றான காணிக்கு நி. ப. 12 குளி 10 7/8 ஆடபோ ஒரே துண்டாய் கூடிய நி ப 28 குளி 15. 3/8 எல்லை கிழக்கு: இண்டாசது பெயர்வழியான அடைமானங்கைவைத்தவருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு: பொன்னு சிவகுருவிற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு: கந்தையா சின்னக்கண்டனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு: ஒழுங்கை, இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள், பலா, கிணறு, தண்ணீர் இறைக்கும் இயந்திரம், சொரியலாய் நி. ப. 6ம், கொட்டில் வீடு வழிவாய்க்கால் சொரியலாய் அரைவாசியும் (மதிப்பிட்ட விலை ரூபா 6500/-)

தொகையின் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| துராட்சி — — | ரூபா | 1527-90 |
| துராட்சித் தொடக்கம் தீர்வை வரை உள்ள வட்டி | ,, | 25-60 |
| | ,, | 1553-50 |
| தீர்வைத் தொடக்கம் தீர்வை வரை உள்ள வட்டி | ,, | 38-[illegible] |
| | ,, | 1592-[illegible] |
| கொடுக்கப்பட்ட தொகை | ,, | 350-00 |
| மிகுதி தொகை | ,, | 1242-33 |
| 26-4-70 வரையுள்ள வட்டி | ,, | 15-52 |
| | ,, | 1257-85 |
| கொடுக்கப்பட்ட தொகை | ,, | 270-00 |
| | ,, | 987-85 |
| வட்டி 20 நாட்களுக்கு | ,, | 2-74 |
| | | 990-59 |
| கொடுக்கப்பட்ட தொகை | ,, | 100-00 |
| மிகுதி | ரூபா | 890-59 |
| 16-5-70 தொடக்கம் மிகுதிப்பணம் கொடுக்கும் வரை 5வீத வட்டி 2-9-70 வரை | ரூபா | 12-98 |
| செலவு தொகை | , | 81-70 |
| மொத்த | ரூபா | 1085-27 |

சிவலிங்கநிலயம், க. நல்லலிங்கம்
வி. மு. றோட், ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்,
பருத்தித்துறை 19-7-70. எம். 166 24—7—70.

## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 10473

கரணவாய் வடக்கு
1 சுப்பையா நடேசன்
2 பெண் இலட்சுமிப்பிள்ளை
வழக்காளிகள்

எதிராக

கரணவாய் வடக்கு,
ஆழ்வான் கிருஷ்ணபிள்ளை
—எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1970ம் ஆ ஆவணி மீ 30-ந்திகதி (30-8-70) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய் கொத்தாவத்தை குறிச்சியிலுள்ள கண்ணன் தோட்டம் நிலப்பரப்பு 12 மேற்படி நிலப்பரப்பு 2¼ எல்லை கிழக்கு ஆழ்வான் மாணிக்கனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு கந்தையா தம்பையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் மேற்கு ஆழ்வான் வயிரவனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு இராமலிங்கம் தாமோதரம்பிள்ளையின் உரிமைக்காரருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலில் சொரியலாய் நிலப்பரப்பு 2 குளி 14½ பதிவு இல: A 118/34

தீர்வைத்தொகை: ரூ 1303-25
ரூ. 750/-க்கு 6-5-69
தொடக்கம் 24-7-69வரை
2½மாதத்திற்கு 10%வட்டி 15-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1 ஆறுமுகம் மதியாபரணம் மைம்பெண்
இரத்தினம், மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

இல M B 10016 எதிராக —வழக்காளி

1 சுப்பிரமணியம் பாலச்சந்திரன்
செட்டி வீதி, நல்லூர். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10016ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆ ஆவணி மீ 12-ம் திகதி (12-8-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4950/-ம் 30-5-68 தொடக்கம் 24-8-69 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 407-81ம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை "மேற்கிலண்டிபுலம்' நி. பர. 2ம் 1¾ குளியும் இவ்வாதனத்துக்கு முன் உரிமைக்காராகிய நாகலிங்கம் சுப்பிரமணியத்தால் கட்டப்பட்ட வீட்டின் முழு உரிமையும் கிழக்குக் காணியில் உள்ள கிணற்றில் கிணற்றுக்குரிய வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் வான் பயிர்செய்பயிர்களும் மற்றும் இதற்குச் சேர்ந்தவைகளும்: எல்லை கிழக்கு: வல்லிபுரம் சுப்பிரமணியத்தின் ஆதனம். வடக்கு: வீதி தெற்கு: கந்தர் நமசிவாயத்தின் ஆதனம். இவையடங்கலுள் சொரியலாய் 2/3 மூன்றில் இரண்டு பங்கு. Regd D: 198/75

J. A எட்வேட்,
நாரந்தனை தெற்கு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்
ஊர்காவற்றுறை, 25—6—70 எம். 167 24—7—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. தெல்லிப்பழை வீமன்காமம் கதிர்காமர் பொன்னுத்துரையும்
2. ஷை பெண் சரஸ்வதியும் — வழக்காளிகள்.

வழ: இல. M. B. 8543 எதிராக

1. மாதகல் வன்னித்தம்பி இராமலிங்கம்
2. தெல்லிப்பழை மேற்கு சின்னப்பா செல்லத்துரையும்
பெண் பொன்னப்பிள்ளையும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8543 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விவரிக்கப்படும் துண்டுக காணியை 1970-ஆம் ஆ புரட்டாதி மீ 9 ஆம் உ (9-9-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை; முதல் வட்டி ரூபா 4233-75 சதம். இதில் ரூபா 3000/—க்கும் 25-10-66 தொடக்கம் 28-7-68 வரைக்கும் 100க்கு 7 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 340 92 சதம். செலவழித்த செலவு ரூபாய் 252-15 வெளியாத்துச் செலவு ரூபா 47-12 எதிர் வரும் செலவு ரூபா 41-65, இதில் ரூபா 2000/— கழிபட வேண்டியது

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி கரைச்சிக் கோயிற்பற்று வெலிக்கண்டல் இறை பழந்தறை வயல் பரப்பு 200 எல்லை கிழக்கு நவரத்தினம் பெண் பரமேஸ்வரியினுதைனம், வடக்கும் மேற்கும் ஆறு. தெற்கு தம்பிஐயா கை. பெ. முத்துக்குட்டிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசிப் பங்கும். L 1/196 ல் பதியப்பட்டிருக்கிறது.

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, க. சுப்பிரமணியம்.
யாழ்ப்பாணம், 26-6-70. கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 171 24-7-70

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம் .....

2-ம் பக்கத்து வளர்ச்சி)

சந்நிதானம் அவர்கள் ஏனைய ஆதீன முனிபுங்கவர்கள் பிரமுகர்கள ஜன சமுத்திரம்போல் மக்கள் சூழ திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் அவர்கள் சிறப்பாக மகா கும்பாபிஷேகத்தை செய்து வைத்தார்கள்.

கும்பாபிஷேகம் நடைபெற்றதும் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் அவர்கள் விலையுயர்ந்த பொன்னுடைப் போர்த்தி மலர் மாலை அணிவித்துப் பாராட்டுதல் தெரிவித்தார்கள்,

சுவாமி சன்னிதியைச் சுற்றிலும் உள்ள பிரகாரத்தில் சுதையினால் கலைவடிவங்கள் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. கும்பாபிஷேக மலர் வெளியீடுசெய்யப்பட்டுள்ளது.

'இந்துசாதனம்' கௌரவ நிருபர்
ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன்

முழுத்தொகை
ரூ 1318-88க்கு 25-7-69
தொடக்கம் 6-6-70 வரை
5% வட்டி ரூபா 60-40
கோட்டுச்செலவு ரூபா. 182-93

மொத்தம் ரூபா 1562-21

V, M கந்தசாமி
Commissioner of Sales, Valuer
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
12-7-70 எம். 165 24-7-70

# ஈழத்து மாணவர்களுக்குப் பெருவெற்றி

லண்டன் பொறியியற் கழகத்தினரால் 1970ம் ஆண்டு ஏப்ரில் மாதம் நடத்தப்பட்ட உயர்தரப் பரீட்சையில் நீர்ப்பாசனத் திணைக்கழகத்தைச் சேர்ந்த திரு. பீ. ஐயசிங்கம், திரு. எஸ். திருஞானசம்பந்தர் ஆகிய பொறியியலாளர் சித்தியடைந்தனர். இவர்கள் பெற்ற சித்தி சர்வதேச ரீதியில் இலங்கைக்குக் கௌரவத்தை ஈட்டியுள்ளது. இவர்கள் இருவரும் பரீட்சைக்கு எழுதிய கட்டுரைகள் உச்சத் தகைமை வாய்ந்தனவெனக் கருதப்படுகின்றது.

பருத்தித்துறை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்த இவ்விருவரும், முறையே ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காரைதீவு மேற்கு சணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் —வழக்காளி

இல. M. B. 11048 எதிராக

காரைதீவு மேற்கு ஆறுமுகம் குமரேசு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11048-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுகாணி 1970-ஆம் ஹு புரட்டாதி மீ 2-ஆம் திகதி (2-9-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 3447/— இதில் ரூபா 2000/-க்கும் 19-8-69 தொடக்கம் 4-3-70 வரைக்கும் 100 க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 305-75. செலவழித்த செலவு ரூபா 194-80. வெளியாத்துச செலவு ரூபா 60-25. எதிர் வரும் செலவு ரூபா 50-70.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோயிற்பற்று காரைதீவு மேற்கிறை கொசக்குளி' பரப்பில. 15 பதினைந்தும் பனைகளும் வடலிகளும் செய்பயிர்களும் வீடுகளும் கிணறும், எல்லை கிழக்கு கந்தையா இராமனுதருக்கும் வேலாயுதர் சின்னத்துரைக்கும் கந்தையா ஆறுமுகத்துக்குமுரிய ஆதனங்கள். வடக்கு கந்தையா சங்கரப்பிள்ளைக்கும் கந்தையா ஆறுமுகத்துக்குமுரிய ஆதனங்கள். மேற்கு பொன்னம்பலம் ஆறுமுகத்துக்கும் சுப்டர் வேலுப்பிள்ளைக்குமுரிய ஆதனங்கள் தெற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் வேலாயுதர் சின்னத்துரைக்குமுரிய ஆதனங்கள். இதில் மேற்கெல்லையிலிருக்கு சுப்பர் வேலுப்பிள்ளையின் காணியில் கிழக்கெல்லையருகாக பெரிய ஒழுங்கையில் சந்திப்பதற்கு 8 எட்டு முழ அகலங்கொண்ட ஒழுங்கையின் வழிப் பாவப்புரித்தும். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

க. சுப்பிரமணியம்

நம்: 24, 1-குறுக்குத் தெரு, கொமிஷனர் & விலைமதிப்பாளர்

யாழ்ப்பாணம். 20-1-70 ம 170 24-7-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னத்தம்பி சிவலிங்கத்தின் மகள் குணமதி,

2/30 விதானை ஒழுங்கை சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

வழ: இல M. B. 10203 எதிராக —வழக்காளி

1. தாமு சிதம்பரப்பிள்ளை கந்தையா நல்லூர் யாழ்ப்பாணம்,
2. செல்லையா நவரத்தினம், 170 கோவில்வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10203 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ஆம் ஆண்டு ஆவணி மாசம் 22-ம திகதி (22-8-70) சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தல் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா 8,370/— 7-8-68 தொடக்கம் 24-5-68 வரைக்கும் ரூபா 5,000-க்கு 12 வீத வட்டியும் அதற்குப் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 304/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் ஆறை "மனமதராயன வளவு" இதன் நில பரப்பு 4½ இதிலிருந்து பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு 3 குளிகள் 1½, கிழக்குப் பக்கமாக முதலாவது துண்டாக விபாகக்கப்பட்ட நில பரப்பு 2 குளிகள் 15. 1/2, தூர்வை நில பரப்பு 0 குழிகள் 3½, உத்தரவு பெற்ற உலாந்தா N. தம்பு அவர்களால் வரையப்பட்ட அளவுபடம் இலக்கம் 1187 ல திகதி 27-4-61 ல் இரண்டாவது துண்டாக விபாகிக்கப்பட்டிருக்கிறது இந்தப் பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு 3 குளிகள் 1½ம், மூலறில் இரண்டு (2/3) பங்கு கிணற்றிலும் தூர்வை நிலத்திலும். பயிர்வகைகளும் எல்லை கிழக்கு முத்துமாரியம்மன் கோவில் ஆதனம். வடக்கு 1. சிதம்பரப்பிள்ளையின் ஆதனம். மேற்கு ஒழுங்கையும் இக்காணியின் மீதியும். தியாகராசா பெண் கமலத்தின் ஆதனம். தெற்கு 8. சண்முகராசா கந்தையா பெண் மங்கையற்கரசியின் ஆதனம், இதடங்கலும் இக்காணிக்கு மேற்கெல்லை பக்கமாய் கோவில் ரோட்டுக்குப் போவதற்கு விடப்பட்ட ஒழுங்கையின் போய் வரப் பாவிப்புரிமையும், மீதக் காணியின உரிமைக்காறருக்குரிய குறிப்பிட்ட கிணற்றில் மூன்றில ஒரு (1/3) பங்கும் தூர்வை நிலமும் வழிவாய்க்கால் பற நீங்கலாக.

பதிவு D 29./289, D 304/24.

வே. கோபாலபிள்ளை

22. ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலமதிப்பாளர்

யாழ்ப்பாணம். 29-6-70, எம் 164 24—7—70.

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்


யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 24—7—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

### வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில்

மேற்படி கோவில் அம்பாள் உற்சவம் ஆடி மாத 11-ம் உ (27-7-70) திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது

## செயற்கரிய செய்க!



பக்தர்: "தமிழின் வளர்த்துக்காக இருபெரும் கல்லூரிகளைத்திறம்பட நடத்தி வருகின்றர்களாம் ஸ்ரீ மகாமாரியம்பாள் தேவஸ்தானத்தினர்; இது இந்தோனேஷியாவில் மேடான்எனும் நகரத்துச் செய்தி. சைவமும் தமிழும் - எங்கெங்கெல்லாம் பொலிந்து விளங்குகிறது என்பதை நினைக்க நினைக்க......?

சித்தர்: உள்ளம் குளிருது என்று கூறுங்களேன் அப்படித்தானே "செயற்கரியசெய்வர் பெரியர்; இது அந்த நாட்டு மக்களுக்குத் தரும்; இங்கே சில தேவஸ்தானங்களில் திருவிழா என்றதும் களியாட்டமாக நினைக்கிறர்கள்; காலால்நடப்பமோ? தலையால் நடப்பமோ? என்று கூத்தாடுகிறர்கள்; தேவஸ்தானங்களில் இணைந்தோ தனித்தோ தேவார வகுப்புக்களையோ, சமய வகுப்புக்களையோ ஏன் நடத்தக்கூடாது......?

"நாயன்மார் – நாதன்"

## தமிழ் விழா

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையினது வருடாந்த தமிழ் விழா 24, 25-7-70 ம் நாட்களில் நடைபெறும்

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 7352

காரைநகர் கிழக்கு பொன்னையா நமசிவாயமும் பெண் இராசம்மாவும்

—வழக்காளிகள்

எதிராக

திருநெல்வேலி தம்பிப்பிள்ளை இராசரெத்தினமும் பெண் கனகமணியும்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 7352-ஆம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணியை 1970-ம் ஹு ஆடி மீ 29-ந் உ புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 11440/-ம் 8-4-65 தொடக்கம் 17-11-65 வரைக்கும ரூபா 8000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 536-10 சதமும்.

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்கோயிற்பற்று கொக்குவில்கிழக்கு இறை "கரியபுலம்" மா. நில. இவை ஒன்றும் பயிர்வகைகளும்கல்வீடும், எல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு கணபதிப்பிள்ளை தம்புவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம. மேற்கு தம்பையா நல்லையாவுக்குரிய ஆதனம். தெற்கு இராமுப்பிள்ளை பெண் அன்னலெட்சுமிக்குரிய ஆதனம்,

பதிவு இலக்கம் D 286/290.

அ ஜெகநாதன்

கொமிஷனர், விலைமதிப்பாளர்

16 A. அம்மன்ரோட், கந்தர்மடம்

யாழ்ப்பாணம்.

எம். 172, 24-7-70

### சைவ சமயக் கல்வி

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

களிலும், வித்தியா மண்டபங்களிலும், வேற்றிடங்களிலும் ஆராயப்பட்டு வருகின்றது.

அங்ஙனம் ஆராயும் ஆராய்ச்சிதான் பலவகை. சிறுவருக்கு அறிவு நூல் பயிற்றுவது அவர்தம் தாய்மொழியிலா, அன்றேல் பிறமொழியிலா என்பது ஒரு ஆராய்ச்சி. ஐரோப்பிய பாதிரிமார் நடத்தி வரும் கலாசாலைகளிற் சைவப் பாலியர் படித்தல் முறையா காதாவென்பது மற்றோராராய்ச்சி.

சைவப் பாலியர் சைவவித்தியாசாலையை அடைந்து, சிவநெறி நிற்கும நல்லாசிரியரிடத்துத் தந்தாய்மொழியிலே அறிவு நூலைக் கற்றல் வேண்டும் என்பது அறிஞரனைவருக்கும் ஒப்பமுடிந்த முடிபாதலின், மேற்போந்த ஆராய்ச்சிகள் வெற்றுராய்ச்சிகளாமென்பதொருதலை.

விழுப்பத்தைத் தருகின்ற ஒழுக்கத்தை விருத்தி செய்யுங் கல்வியே கல்வி. ஏனைய கல்வி கல்வியெனப்படமாட்டாது. ஒழுக்கம் நூற்கல்வியால் மாத்திரம் எய்தப்படுவதொன்றல்ல நல்லாசிரியரும், நல்மாணாக்கரும் ஒன்று சேர்ந்து உடனுறையுங் குருகுல வாசங்களில், நித்திய கர்மானுஷ்டானம பிரமசரியம முதலிய ஏற்பாடுகளினல் நல்லொழுக்கம் வளர்ச்சி யெய்துகின்றது. அத்தகைய குருகுல வாசங்களே உண்மைக் கல்வி நிலையங்களாகக் கருதப்படத்தக்கன.

(வளரும்)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

விசுவநாதி கதிரவேலு, சாவணை —வழக்காளி

இல: M B. 9508 எதிராக

1. நாகேந்திரா அருமைநாயகமும் பெண்
2. தவமணியும், சரவணை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9508-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ஆம் ஹு ஆவணி மீ 29-ஆம திகதி (29—8—70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 2409 – 35ம, 21-10-67 தொடக்கம் 24-12-68 வரைக்கும ரூபாய் 1500/-க்கு 15 வீத வட்டியும அதன்பின முழுத்தொகைக்கும இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 370-20ம் இதில் ரூபாய் 1000/- நீக்கி

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை 'இலங்கையதேவன் வலடும்" மது துண்டுகளும் நி ப. 20 வீடும் கிணறும், தென்னை மரங்களும் வாண்டயிட செய்பயிர்களும. எல்லை கிழக்கு: நாகலிங்கம் நடராசாவுக்கும தம்பிராசா பெண் தங்கம்மாவுக்குமுரிய ஆதனங்கள் வடக்கு: தம்பிராசா பெண் தங்கம்மாவுக்கும் வயித்திலிங்கம் தம்பிராசாவுக்குமுரிய ஆதனங்களும். குளமும், மேற்கு: வயித்திலிங்கம் தம்பிராசாவுக்கும் நடராசா பெண் பாக்கியலெட்சுமிக்கும் வேலுப்பிள்ளை முருகேசுவுக்கும் பங்காளிகளுக்கும் சொந்தமான ஆதனங்கள. தெற்கு: ஒழுங்கை. இவையடங்கலும்.

Regd C. 355/87

காரந்தனை தெற்கு, J. A. எட்வேட்,

ஊர்காவற்றுறை கொமிஷனர் & விலைமதிப்பாளர்

20-7-70 எ. 169 24 -7—70

## பக்தி உணர்வு

1-ம் பக்கத்து வளர்ச்சி

எனவே, மேலான பரம்பொருள் குறித்து அவனுல் எண்ண இயலவில்லை அவ்வாறு எண்ண இயலாமையால் பக்தி உணர்வு படிப்படியே குறைய நேர்கிறது.

சூழ் நிலை:

பண்டெல்லாம் ஊரிலும் ஊரைச் சுற்றிலும் மரங்களும் செடி கொடிகளும் மிகுதி. அவ்வூரில் வாழும் மக்களுக்கான உணவு, அந்த ஊரைச் சுற்றியே விளைந்தது மரம் செடி கொடிகளிலிருந்து மக்களுக்கு எப்பொழுதும் தூய உயிர்வளி பிராணவாயு கிடைத்தது. கிணறுகளிலும், ஆறுகளிலும் ஓரளவு தூய நீரும கிடைத்தது ஊரைச்சுற்றி விளைந்த தூயஉணவும் கிடைத்து வந்தது. தற்போதோ, விறகிற்காகவோ, விற்பனைக்கோ கட்டிடங்கள் கட்டுவதற்கோ வேறு காரணங்களுக்கோ மரங்கள் பலவும் வெட்டப்பட்டு விடுகின்றன சாலைகளிலுள்ள மரங்களுக்கும் இந்நிலையே. ஊரைச் சுற்றிலும் பெரும்பாலும் சிறிதும் பெரிதுமான கரிப்புகையை உமிழும் தொழிற்சாலைகள் எங்கும் பெருகி வருகின்றன. உணவு விளையும் வயல்கள் பல, பல இடங்களில் தொழிற்சாலைகளாக மாறியுள்ளமையைப் பலரும் அறிவர். தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீர் ஊர்ப்புறத்தே அல்லது ஆறு முதலிய நீர்நிலைகளில் கொட்டப்படுகிறது. மரம், செடி, கொடிகளின் குறைவினுலும், தொழில் மனைகளின் கரிப் புகையாலும் பல்வேறு வகையான நிரம்பிய போக்கு வரத்து சாதனங்கள் எழுப்பும் தூசிப் படலங்களாலும் காற்று மண்டலம் எங்கும் கெட்டு விளங்குகிறது. அங்கங்கேயுள்ள அசுத்தநீர்த் தேக்கத்தினுல், கிணறுகளில் கூட தூயநீரைப் பெறுதல் அரிகிறது. உணவும் எங்கோ விளைந்து, பலநாள் தேக்கப்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

### கலை விழா

வாணி கலாமன்றத்தின் வருடாந்த கலைவிழா ஆகஸ்ட் மாதம் 15, 16ம் திகதிகளில் சிறப்பாக நடைபெறும்.

### ஆசிரியர்கள் சேவைக் காலம்

இவ்வருடம் 55 வயதையடையும் ஆசிரியர்களுக்கு ஓர் ஆண்டு சேவை நீடிக்கப்படும் 55 வயதைத்தாண்டி சேவை நீடிப்புக்கு மனுப் பண்ணியவர்களுக்கும், சேவை நீடிப்பு வழங்கப்பட்டவர்களுக்கும் சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது.